மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) அத்தகைய செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

* 9 கேள்வி.—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய கல்வி–தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாடு பூராவும் ஓடும் சர்க்கார் பஸ்களில் சட்டசபை அங்கத்தினர்கள் கட்டணமின்றி பிரயாணம் செய்ய அனுமதிக்கும் உத்தேசமுண்டா?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்: அத்தகைய செயற் குறிப்பு எதுவும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

Arts College in Tiruttani

* 10 Q.—Thiru. K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to start an Arts College in Tiruttani Taluk, Chingleput district from the next academic year 1967–68?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

Thiru K. VINAYAKAM: Sir, in view of the fact that there are about 30 high schools in the Tiruttani taluk and about 30,000 students are coming out of those schools successfully after passing the S.S.L.C. Examination every year and in view of the fact that most of them migrate to the Andhra University because they are denied seats in the Madras City Colleges, will the Government consider the possibility of opening an Arts College there provided the Devasthanam of the Tiruttani Temple or the public come forward to contribute money for the starting of the college?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்: திருத்தணிப் பகுதியில் இருந்து ஒரு கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கை இது வரை வந்ததாகத் தெரியவில்லை. அங்கு ஒரு கல்லூரியை வைக்க வேண்டுமென்றால் அதற்கான நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். கனம் உறுப்பினர் அவர்கள் ஐந்து லட்சம் ரூபாயைச் சேர்த்துத் தருவார்களேயானால் அரசாங்கம் அங்கு ஒரு கல்லூரியை வைக்க முயற்சி எடுக்கும். முறைப்படி அவர்கள் விண்ணப்பத்தைக் கொடுப்பார்களேயானால் கவனிக்கப்படும்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் புது விடுதி

*11. கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: மதிப்பிற்குரிய கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கட்டப்படும் தங்கும் விடுதி எப்போது திறக்கப்படும்?